பெயரில் ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டமாதிரி எந்த ஒரு கருத்துருவும் இருப்பதாக குறிப்பில் இல்லை. அப்படி ஏதாவது முயற்சி இருந்தால், புதிதாக தொடங்கப்படும் திட்டத்தோடு அதனையும் சேர்த்து, லாபகரமாக, அவசியமானது என்று கருதும் நிலை இருந்தால், அதுபற்றி பரிசீலிக்கலாம்.

திரு. அ. வெங்கடாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் எந்தெந்தப் பகுதிகளில் இப்படிப்பட்ட சேம்பர் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன ? மேலும் எத்தனை ஆரம்பிக்க அரசு உத்தேசித்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் ராயவரம் என்கிற பகுதியில் அதனை அமைக்கின்ற பணி தொடங்கப்பட்டிருக்கிறது. மற்றபடி எந்த இடத்திலும் அதனை அமைப்பதற்கான கருத்துரு எதுவும் இங்கே இல்லையென்று முன்பே குறிப்பிட்டேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சொல்லியதிலிருந்து, அவர் குறிப்பிட்ட இடத்தில் அவசியம் என்ற நிலை இருந்தால், நிதி ஆதாரம் மற்றும் பிரச்சினைகளை எல்லாம் பொறுத்து அதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கன்னியாகுமரி விவேகானந்தர் ஆலயத்திற்கு கேபிள் கார்.

410—(* வினா எண் 9805) திரு. த. புஷ்பராசு : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி விவேகானந்தர் ஆலயத்திற்கு கேபிள் கார் வசதி செய்து கொடுக்க அரசு உத்தேசம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

1987 ஏப்ரல் 20]

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, கன்னியாகுமரி விவேகானந்தா ஆலயத்திற்கு டீசல் கார் வசதி செய்து கொடுக்க அரசுக்கு உத்தேசம் உண்டா என்ற கேள்விக்கு அதற்கு உத்தேசம் இல்லையென்று இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சில ஆண்டுகளுக்கு முன்பு வரை கன்னியாகுமரியில் மாலை நேரத்தில் கிழக்குப் புறத்திலிருந்து எழுகின்ற நிலவின் பாதியையும், மேற்கு புறத்தில் விழுகின்ற நிலவின் பாதியையும் காண்கின்ற அற்புதக் காட்சி இருந்து வந்தது. அந்த அற்புதக் காட்சியை காண உலகத்திலிருந் தெல்லாம் பயணிகள் வந்துகொண்டிருந்தார்கள். இப்போது அந்த அற்புத காட்சிகள் தெரியாதவாறு அங்கே கட்டடங்கள் அவற்றை மறைத்துக்கொண்டு இருப்பது அரசுக்குத் தெரியுமா? அப்படி என்றால் அதனை மாற்றியமைக்கின்ற உத்தேசம் அரசிடம் உண்டா?

(முற்பகல் 10-30)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட தகவல் இதுவரை கிடைக்க வில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்களாவது அதுபற்றி அரசுக்கு தெரிவித்திருந்தால் சரியாக இருந்திருக்கும். இப்பொழுது கூட எந்தக் கட்டடம் என்று எனக்குப் புரியவில்லை. அது முறையாக இருந்தால் அதைப்பற்றி ஆய்ந்து நடவடிக்கை எடுக்கலாம்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பட்டுக்கோட்டை தொகுதி, ஆலம்பள்ளம்-முசிரி சாலையில் பாட்டுவனாச்சி ஆற்றில் பாலம்.

411—(* வினா எண் 10109) திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை தொகுதியில் உள்ள ஆலம்பள்ளம்-முசிரி சாலையில் பாட்டுவனாச்சி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன?